**பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல 435**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பத்தாவது பாராளுமன்றம்
(முதலாவது கூட்டத்தொடர்)

# அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் பன்னிரண்டாவது அறிக்கை

(2025.02.27 மற்றும் 2025.05.23 ஆம் திகதிகளிலான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை)

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தவிசாளர்
பாராளுமன்ற உறுப்பினர்
கௌரவ. (டாக்டர்) நிஷாந்த சமரவீரவினால்
2026 சனவரி மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.

2026 சனவரி மாதம் 08 ஆம் திகதி அச்சிடப்பட வேண்டுமென
பாராளுமன்றத்தினால் உத்தரவிடப்பட்டது.

**பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர்**
**அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் கட்டமைப்பு**

1. கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர, பா.உ, (தவிசாளர்)
2. கௌரவ அர்கம் இல்யாஸ், பா.உ, (2025.05.08 முதல்)
3. கௌரவ மனோ கணேசன், பா.உ, (2025.03.21 முதல்)
4. கௌரவ (சட்டத்தரணி) தயாசிறி ஜயசேகர. பா.உ, (2025.05.20 முதல்)
5. கௌரவ (சட்டத்தரணி) அர்ஜுன சுஜீவ சேனசிங்க. பா.உ, (2025.03.21 முதல்)
6. கௌரவ. டி.வி. சானக, பா.உ, (2025.03.21 முதல்)
7. கௌரவ (சட்டத்தரணி) அநுராத ஜயரத்ன, பா.உ (2025.03.21 முதல்)
8. கௌரவ நலீன் பண்டார ஜயமஹ, பா.உ, (2025.03.21 முதல்)
9. கௌரவ. எஸ்.எம். மரிக்கார், பா.உ, (2025.03.21 முதல்)
10. கௌரவ முஜிபுர் ரஹுமான், பா.உ, (2025.05.20 முதல்)
11. கௌரவ சமிந்த விஜேசிறி, பா.உ, (2025.03.21 முதல்)
12. கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா, பா.உ, (2025.05.08 முதல்)
13. கௌரவ எம்.கே.எம் அஸ்லம், பா.உ,
14. கௌரவ (சட்டத்தரணி) நிலந்தி கொட்டஹச்சி, பா.உ, (2025.03.21 முதல்)
15. கௌரவ சமன்மலீ குணசிங்க, பா.உ.
16. கௌரவ திலித் ஜயவீர, பா.உ,, (2025.03.21 முதல்)
17. கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன், பா.உ, (2025.05.08 முதல்)
18. கௌரவ சுஜீவ திஸாநாயக்க, பா.உ,
19. கௌரவ சுதத் பலகல்ல பா.உ
20. கௌரவ (டாக்டர்) எஸ். ஸ்ரீ பவானந்தராஜா, பா.உ
21. கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வு பெற்ற) பிரகீத் மதுரங்க பா.உ, (2025.03.21 முதல்)
22. கௌரவ ஜகத் மனுவர்ண, பா.உ.
23. கௌரவ ருவன் மாபலகம, பா.உ.
24. கௌரவ சுனில் ராஜபக்ஷ, பா.உ.
25. கௌரவ தர்மப்ரிய விஜேசிங்க, பா.உ

26. கௌரவ அசித நிரோஷண எகொட விதான, பா.உ.
27. கௌரவ (டாக்டர்) பத்தநாதன் சத்தியலிங்கம், பா.உ, (2025.03.21 முதல்)
28. கௌரவ திலிண சமரகோன், பா.உ.
29. கௌரவ சந்திம ஹெட்டியாரச்சி, பா.உ.
30. கௌரவ (செல்வி) (சட்டத்தரணி) ,லக்மாலி ஹேமச்சந்ரபா.உ,
31. கௌரவ தினேஷ் ஹேமந்த, பா.உ, (2025.03.21 முதல்)

**<u>குழு அலுவலகத்தின் பணியாட்டொகுதியினர்</u>**

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் பணியாட்டொகுதியினர் பின்வருமாறு

- ❖ பிரதான உத்தியோகத்தர் — திருமதி. ரூபானி டி சொய்சா
- ❖ பிரதிப் பிரதான உத்தியோகத்தர் — திரு. எஸ். லக்ஷான் விக்ரம
- ❖ பாராளுமன்ற உத்தியோகத்தர். — திருமதி. ஜி.வி.எஸ்.கே. குமாரி
- ❖ பாராளுமன்ற உத்தியோகத்தர். — திருமதி. ஐ.எஸ். கோமஸ்.
- ❖ பாராளுமன்ற உத்தியோகத்தர். — திருமதி. ஜீ.எல்.டி. பிரனாந்து
- ❖ பாராளுமன்ற உத்தியோகத்தர். — செல்வி. எம்.என்.பி. பெரேரா

## குழு அறிக்கைகள்

www.parliament.lk என்ற இணையத் தளத்தில் பின்வரும் வழியில் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் அறிக்கையைத் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

www.parliament.lk

↓

தமிழ்

↓

பாராளுமன்ற நடவடிக்கைகள்

↓

குழுக்கள்

↓

குழு அறிக்கைகள்

## பொருளடக்கம்.


| | | பக்க எண் |
|---|---|---|
| 1. | தவிசாளரின் குறிப்பு. | V |
| 2. | நிறைவேற்றுச் சுருக்கம் | VI |
| 3. | நிதிக் கூற்றுகள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம் | 1 |
| 4. | அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் விசாரணை செய்யப்பட்ட நிறுவனம் – இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் | 12-36 |

## தவிசாளரின் குறிப்பு

இலங்கைப் பாராளுமன்றத்தின் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் போது, 2025.02.27 மற்றும் 2025.05.23 ஆகிய இரு தினங்களில் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்ட வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அலுவல்கள் அமைச்சின் கீழ் உள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்குரிய கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை குறித்த விரிவான அறிக்கையை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

வேலைவாய்ப்பிற்காக வெளிநாடு செல்லும் இலங்கையர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரியை பிரதானமாகக் கொண்ட 18 சிறப்பு நோக்கங்களுடன், 1994 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க மற்றும் 2009 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டங்களினால் திருத்தப்பட்ட 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் நிறுவப்பட்டுள்ளது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமானது இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான முதன்மையான ஒழுங்குமுறைப்படுத்தும் நிறுவனமாகும். இது வெளிநாடுகளில் வேலைவாய்ப்பை எதிர்பார்க்கும் இலங்கையர்களின் கௌரவம், பாதுகாப்பு மற்றும் சமத்துவம் ஆகிய நிபந்தனைகளின் கீழ் புலம்பெயர்வை உறுதிப்படுத்தும் வகையில், தொழிலாளர் புலம்பெயர்வினை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டக் கட்டமைப்பின் கீழ் நிறுவப்பட்ட பரந்த விடயப் பரப்பைப் கொண்ட ஒரு நிறுவனமாகும்.

எவ்வாறாயினும், தனது விடயப் பரப்பிலிருந்து விலகி, ஒரு ஒழுங்குமுறைப்படுத்தும் நிறுவனம் என்றல்லாமல் தொழிலாளர்களின் நலன்புரியைப் புறக்கணித்து, எவ்வழியிலேனும் தொழிலாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வருமானம் ஈட்டும் நிறுவனமொன்றாக இந்நிறுவனம் செயற்பட முயன்ற விதம் குறித்து குழுவின் கவனம் செலுத்தப்பட்டது. அப்போதிருந்த அரசியல் அதிகாரபீடத்தின் தேவைகளுக்கேற்ப தொழிலாளர்களுக்கு எந்தவொரு நலனும் இல்லாத அரசியல் திட்டங்களுக்காக பணியகத்தின் நிதியை செலவிட்டதன் மூலம்

மக்களுக்கு பாரிய நிதி இழப்புகளை ஏற்படுத்திய சந்தர்ப்பங்களும் எமது விசாரணையின் போது தெரிய வந்தது.

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு, கௌரவ சபாநாயகர் உள்ளிட்ட பாராளுமன்றப் பணியாளர்கள் மற்றும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் இரு ஆலோசகர்களின் ஒத்துழைப்பையும், திறைசேரி அதிகாரிகள் மற்றும் தேசிய கணக்காய்வு அலுவலகத்திடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பையும் நன்றியுடன் பாராட்டுகின்றேன்.

**டாக்டர் நிஷாந்த சமரவீர**
தவிசாளர்
அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு

## நிறைவேற்றுச் சுருக்கம்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தொடர்பாக 2025.02.27 மற்றும் 2025.05.23 ஆகிய திகதிகளில் நடைபெற்ற குழுவின் விசாரணையின் போது, நிறுவனத்தின் நிருவாக, நிதி மற்றும் ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளில் பல பாரதூரமான முறைகேடுகளும் பலவீனங்களும் கண்டறியப்பட்டன.

2023 யூன் 20 ஆம் திகதியிடப்பட்டு பொது முகாமையாளரால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபமொன்றின் மூலம், தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் ஐய வினாக்களுக்கு பதிலளிப்பதற்கு முன்னனுமதி பெறுவது கட்டாயமாக்கப்பட்டிருந்ததன் பேரில் அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் கீழ் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் செயலாக இந்த விடயம் இனங்காணப்பட்டது. மேலும், 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பணியகச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், பணிப்பாளர் சபையின் 11 உறுப்பினர்களில் 4 பேர் அனுமதிப் பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதால், நலன்களுக்கிடையிலான முரண்பாடு ஏற்பட்டுள்ளது. நிறுவன ரீதியாக, 2024.12.31 ஆம் திகதியாகும் போது பணியாட்டொகுதியில் 156 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், வெளிநாட்டுத் தூதரகப் பணிகளுக்கு அதிகாரிகளை நியமிக்கும் போது புதிய ஆட்சேர்ப்பு நடைமுறை (SOR) மீறப்பட்டுள்ளமையும் கண்டறியப்பட்டது. அத்துடன், பணியகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட 12 தடுப்பில்லங்களில் அபுதாபி, குவைத் உட்பட 07 தடுப்பில்லங்கள் மூடப்பட்டுள்ளதாகவும் தற்போது 05 மாத்திரமே இயக்கப்பட்டு வருவதாகவும் தெரிய வந்தது.

பணியகத்தினால் 2023 மார்ச் 20 ஆம் திகதியிடப்பட்ட 07/2023 மற்றும் மே 04 ஆம் திகதியிடப்பட்ட 10/2023 இலக்கச் சுற்றுநிருபங்கள் ஊடாக, 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தின் 53(3) பிரிவைப் புறக்கணித்து, வேலை ஒப்பந்தங்கள் இன்றி வீட்டுப் பணிப் பெண்களை சுற்றுலா விசா மூலம் ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமானுக்கு

அனுப்புவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2025 மார்ச் 07 ஆம் திகதியாகும் போது இத்திட்டத்தின் கீழ் சுமார் 6,290 வீட்டுப் பணிப் பெண்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், கணக்காய்வாளர் தலைமையதிபதியின் விசாரணைகளின் படி 1,310 பேருக்கு தொழில் கிடைக்கவில்லை என்பதும், 818 பேரின் தகவல்கள் முற்றாகக் காணாமல் போயுள்ளதும் தெரிய வந்தது. இது தொடர்பில் 06 அலுவலர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதுடன், 15 முகவர் நிலையங்களின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

2023 சனவரி முதல் 2024 மே 29 வரையான காலப்பகுதியில் 28,165 பெண் வீட்டுப் பணியாளர்களுக்கு வதிவிடப் பயிற்சி (28 நாட்கள்) வழங்கப்படாமையினால் பணியகத்திற்கு 631,177,650 ரூபாய் பயிற்சி வருவாயிழப்பு ஏற்பட்டுள்ளது. இச்செயன்முறையினூடாக 683 சிறுவர்கள் வெளிநாடு சென்றுள்ளதுடன், முறையான பயிற்சி பெறாத தொழிலாளர்கள் தொடர்பில் 1,925 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

'ஜயகமு ஸ்ரீலங்கா' வேலைவாய்ப்புச் சந்தை வேலைத்திட்டங்களுக்கான மொத்த நிதிச் செலவு 1.25 பில்லியன் ரூபாவாகும். இதில் விற்பனைக் கூடங்களுக்கு மாத்திரம் 542.8 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதுடன், 2022 ஒற்றோபர் மாதம் காலியில் நடைபெற்ற வேலைத்திட்டத்திற்காக கூடமொன்று 170,000 ரூபா வீதம் வாடகைக்கு எடுக்கப்பட்ட போதிலும், 2023 யூலை மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வேலைத்திட்டத்தின் போது கூடமொன்றின் விலை 500,000 ரூபா வரை அதிகரிக்கப்பட்டு, கூடங்கள் அனைத்தும் ஒரே தனியார் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டமை குழுவின் அவதானத்திற்கு உள்ளானது. 500 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான இப்பெறுகை நடவடிக்கை, அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படாமை பாரதூரமான நிலைமையாகும். அதேபோல், இந்த வேலைத்திட்டத் தொடர் மூலம் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியாகும் போது 336 தொழிலாளர்கள் மாத்திரமே வெளிநாடு சென்றுள்ளனர்.

1991 ஆம் ஆண்டு முதல் 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரை சுமார் 5.1 பில்லியன் ரூபாவை கொண்ட குவைத் இழப்பீட்டு நிதியம் பல ஆண்டுகளாகச்

செயலற்றுக் காணப்பட்டதுடன், 1997 முதல் 2022 வரையான காலப்பகுதியில் 4,960,937,306 ரூபாய் வட்டி வருமானத்தை ஈட்டியிருந்தது. எவ்வாறாயினும், 2025.02.27 அன்று நடைபெற்ற அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய, இந்த 5.1 பில்லியன் ரூபா நிதியானது இரண்டு பகுதிகளாக 3 பில்லியன் ரூபாய் பயிற்சித் திட்டங்களுக்காகவும், 2.1 பில்லியன் ரூபாய் 60 வயதைப் பூர்த்தி செய்த வீட்டுப் பணிப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டத்திற்காகவும் ஒதுக்கீடு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் பன்னிரண்டாவது அறிக்கை

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் பன்னிரண்டாவது அறிக்கையை சமர்ப்பிப்பதில் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு மகிழ்ச்சியடைகிறது.

தற்போது, அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் மேற்பார்வையின் கீழ் வரும், அரசங்க பொறுப்பு முயற்சிகள் திணைக்களம் மற்றும் வரவு செலவுத் திட்ட திணைக்களம் ஆகியவற்றின் கீழ் ஒழுங்குபடுத்தப்படும் 462 பொது நிறுவனங்கள் காணப்படுகின்றன. (மூலம் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் திணைக்களம் – 2025.09.04ஆம் திகதிக்கு)

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் (முதலாவது 11 மாதங்களுக்குள்) பின்வருமாறு குழுக்கூட்டங்களை நடத்தியுள்ளது.

| தொடர் இலக்கம் | அழைக்கப்பட்ட நிறுவனம் | குழு கூடிய திகதி |
|---|---|---|
| 1. | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 2025.02.18 |

| | | |
|---|---|---|
| 2. | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 2025.02.20 |
| 3. | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் . | 2025.02.27 |
| 4. | தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபை | 2025.03.05 |
| 5. | தேசிய மருந்தாக்கல் ஒழுங்குறுத்துகை அதிகார சபை | 2025.03.12 |
| 6. | தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபை | 2025.03.27 |
| 7. | வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமானச் சேவைகள் (தனி) கம்பனி | 2025.04.02 |
| 8. | காணிச் சீர்திருத்த ஆணைக்குழு | 2025.05.08 |
| 9. | வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமானச் சேவைகள் (தனி) கம்பனி | 2025.05.09 |
| 10. | ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை | 2025.05.15 |
| 11. | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம். | 2025.05.23 |
| 12. | இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் | 2025.06.04 |
| 13. | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 2025.06.20 |
| 14. | மஹாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 2025.07.09 |
| 15. | காணிச் சீர்திருத்த ஆணைக்குழு | 2025.07.17 |
| 16. | அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் | 2025.07.23 |
| 17. | சிவில் விமானச் சேவைகள் அதிகார சபை | 2025.08.20 |
| 18. | இலங்கை துறைமுக அதிகாரசபை | 2025.09.10 |
| 19. | புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்க அகழ்வுப் பணியகம் | 2025.09.12 |
| 20. | இலங்கை மின்சார சபை | 2025.09.24 |
| 21. | நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை | 2025.10.08 |
| 22. | வரையறுக்கப்பட்ட லங்கா சதொச | 2025.10.10 |
| 23. | இலங்கை மின்சார சபையின் விசாரணைக்கு ஏற்புடைய எல்.ரீ.எல் கம்பனி மற்றும் அதனால் நிர்வகிக்கப்படும் கம்பனிகள் | 2025.10.24 |
| 24. | தேசிய சேமிப்பு வங்கி | 2025.11.19 |

| | | |
|---|---|---|
| 25. | தேசிய சேமிப்பு வங்கி | 2025.11.26 |

அவற்றில், 2025.02.27 மற்றும் 2025.05.23 ஆகிய இரண்டு தினங்களில் விசாரணைக்குட்படுத்தப்பட்ட வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அலுவல்கள் அமைச்சின் கீழ் உள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்குரிய கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகள் மற்றும் அந்த நிறுவனத்தின் தற்போதைய செயலாற்றுகையை ஆய்வுக்குட்படுத்தி வெளியிடப்பட்ட குழுவின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**நிதிக் கூற்றுகள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம்**

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்காகட்டுள்ள நிதிமுன்வைக்கப்ப க் கூற்றுகள்தொடர்பில் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயம் கீழே .காட்டப்பட்டுள்ளது

| நிறுவனம் | கணக்காய்வு அபிப்ராயம் | |
|---|---|---|
| | 2021 | 2023 |
| இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

**<u>கணக்காய்வு அபிப்பிராய வகைகள்</u>**

1. **முனைப்பழியற்ற அபிப்பிராயம் (Unqualified Opinion)**

நிதிக் கூற்றுகள் நிறுவனத்தின் நிதி நிலைமையை நியாயமான முன்வைத்துள்ளதென்பது

2. **முனைப்பழியுள்ள அபிப்பிராயம் (Qualified Opinion)**

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கத்தை தவிர நிறுவனத்தின் நிதி நிலைமை, நிதிச் செயற்பாடு மற்றும் காசுப் பாய்ச்சல் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கேற்ப மெய்யாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றதென்பது

3. **அபிப்பிராயத் துறப்பு (Disclaimer of Opinion)**

போதுமான அல்லது பொருத்தமான கணக்காய்வு சாட்சிகளை இனம்காண முடியாததால் கணக்குகள் தொடர்பில் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளதென்பது.

## 4. எதிர்மறை அபிப்பிராயம் (Adverse Opinion)

நிறுவனத்தின் நிதி நிலைமை, நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்குட்பட்டு மெய்யாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கவில்லை என்பது

## **இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்**

***(வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அலுவல்கள் அமைச்சு)***

விசாரணை மேற்கொள்ளப்பட்ட திகதிகள் - 2025.02.27 மற்றும் 2025.05.23

---

## 2025.02.27 அன்று கலந்துரையாடப்பட்ட விடயங்கள்

### 01. **கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதிலளித்தல்**

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் ஐய வினாக்களுக்கு பதிலளிக்கும் போது, அனைத்து மேலதிக மற்றும் பிரதிப் பொது முகாமையாளர்களும் முன் அனுமதி பெற வேண்டியது கட்டாயமென பணித்து பணியகத்தின் பொது முகாமையாளரினால் 2023 யூன் 20 ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசியலமைப்பின் 154 ஆவது உறுப்புரையின் கீழ் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் வரையறுக்கப்படுவதாகவும், தகவல்களை மறைப்பதற்கான முயற்சி நடைபெறுவதாகவும் கணக்காய்வாளர் தலைமையதிபதி குழுவில் தெரிவித்தார்.

முன்னாள் தவிசாளரின் வாய்மொழி அறிவுறுத்தலின் பேரில், மிகச் சீரான பதில்களை வழங்கும் நோக்கிலேயே இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டதாகவும், இந்தச் சுற்றறிக்கையினால் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிப்பதில் எந்தத் தாமதமும் ஏற்படவில்லை எனவும், 2020 ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்ட அனைத்துச் சுற்றறிக்கைகளையும் மீளாய்வு செய்யுமாறு தற்போதைய தவிசாளர் முன்மொழிந்துள்ளதையும் குழுவினால் அவதானிக்க முடிந்தது.

கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்கும் போது நிறுவனத்தின் பொது முகாமையாளரின் அனுமதியின்றி பதிலளிக்கக் கூடாது எனக்

குறிப்பிட்டுள்ள 2023.06.20 ஆம் திகதியிடப்பட்ட உள்ளகச் சுற்றறிக்கையை இரத்துச் செய்து குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வழங்கப்பட்ட விதப்புரைக்கு இணங்க குறித்த சுற்றறிக்கை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக 2025.03.11 ஆம் திகதியிடப்பட்டு குழுவிற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2. <u>நிறுவனம் தொடர்பான பொதுவான விடயங்கள்</u>

### 2.1. <u>நிறுவனக் கட்டமைப்பு</u>

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமானது பிரதான அலுவலகம், 09 மாகாண நிலையங்கள், 10 மாவட்ட நிலையங்கள் மற்றும் 02 பயிற்சி நிலையங்கள் என்பவற்றைக் கொண்டுள்ளது. 15 வெளிநாட்டுத் தூதரகங்களில் தொழிலாளர் நலன்புரிப் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன. வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காகச் சென்று பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் புலம்பெயர்ந்தோரைத் தற்காலிகமாகத் தடுத்து வைப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டிருந்த 12 தடுப்பு இல்லங்களில், அபுதாபி, ஜோர்தான், லெபனான், மலேசியா, சைப்பிரஸ், பஹ்ரைன் மற்றும் குவைத் ஆகிய நாடுகளில் அமைந்திருந்த 07 தடுப்பு இல்லங்கள் மூடப்பட்டுள்ளன. தற்போது 05 தடுப்பு இல்லங்கள் மாத்திரமே பராமரிக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று, புலம்பெயர் தொழிலாளர்களைப் பழக்குவதற்கும் பயிற்சி அளிப்பதற்குமாக 02 பயிற்சி நிலையங்கள் கொண்டு நடத்தப்படுகின்றன.

இவ்வாறு தடுப்பு இல்லங்கள் மூடப்பட்டுள்ள 07 நாடுகளில் தடுப்பு இல்லங்களுக்குப் பொறுப்பாகப் பணியமர்த்தப்பட்டிருந்த தூதரகப் பணியாட்டொகுதியினரின் விபரம் பின்வருமாறாகும்:

| நாடு | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| குவைத் | 14 |
| பஹ்ரைன் | 3 |
| அபூதாபி | 6 |
| ஜோர்தான் | 7 |
| லெபனான் | 4 |
| மலேசியா | 5 |

இந்த அதிகாரிகள் 02 வருட காலப்பகுதிக்காகவே நியமிக்கப்படுகின்றனர் என்பதால், கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக ஏற்பட்ட நிதிப் பிரச்சினைகளால் பல அதிகாரிகள் மீண்டும் நாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும், அதற்காகப் புதிய அதிகாரிகளை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கு தெரியவந்தது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காகச் சென்று பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுத்த புலம்பெயர்ந்தோரை தற்காலிகமாக தங்குவதற்காகப் பராமரிக்கப்பட்ட 12 தடுப்பு இல்லங்களில் 7 இல்லங்கள் மூடப்பட்டது தொடர்பில் நிறுவனத்திடம் முறையான அறிக்கை எதுவும் இல்லையென்பதால், அந்த 7 இல்லங்கள் மூடப்பட்டமைக்கான காரணங்கள் மற்றும் அவற்றை மீண்டும் ஆரம்பிக்க வேண்டிய அவசியம் உள்ளதா என்பது குறித்த விரிவான அறிக்கையை 02 வாரங்களுக்குள் வழங்குமாறு குழு பரிந்துரைத்தது. அதற்கமைய அபுதாபி, பஹ்ரைன், சைப்பிரஸ், ஜோர்தான், குவைத், லெபனான் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் உள்ள தூதரகங்களுக்குச் சொந்தமான தடுப்பு இல்லங்கள் (Safe Houses) மூடப்பட்டமைக்கான காரணங்கள் உள்ளடங்கிய அறிக்கை 2025.03.11 திகதியிடப்பட்டு குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 2.2. பணிப்பாளர் சபையின் கட்டமைப்பு

1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தின் 5 (1) (இ) பிரிவின் பிரகாரம், பணியகத்தின் பணிப்பாளர் சபையானது 11 உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும். சட்டத்தின் 5(1)(ஈ) ஏற்பாடுகளின் அடிப்படையில் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட 08 உறுப்பினர்களில் 04 பேர், அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் பிரதிநிதிகளிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளமையை குழு அவதானித்தது.

1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டத்தின் 5(1)(ஈ) ஏற்பாடுகளின் அடிப்படையில் அமைச்சரினால் நியமிக்கப்படும் 8 உறுப்பினர்களில் 4 பேரை அனுமதிப்பத்திரம் பெற்ற முகவர் நிலையங்களின் பிரதிநிதிகளிலிருந்து நியமிப்பதன் மூலம் அக்கறை முரண்பாடு ஏற்படுவதால், அவர்களை உள்ளடக்காத வகையில் சட்டத்தைத் திருத்தும் பணிகளை துரிதப்படுத்துமாறு குழு விதந்துரைத்தது. அதற்கமைய, வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை பிரதி அமைச்சரின் தலைமையில் 2025.04.09 அன்று நடைபெற்ற கலந்துரையாடல் தொடர்பான குறிப்புக்கள், 2025.04.30 அன்று பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் ஊடாக குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பணியகத்தில் பதிவு செய்யப்பட்ட அனுமதிப்பத்திரம் பெற்றவர்களின் பெயர்ப்பட்டியலை குழுவிடம் சமர்ப்பிக்குமாறு வழங்கப்பட்ட விதந்துரைக்கமைய, அந்தப் பட்டியல் 2025.03.11 அன்று குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 2.3. பணியாட் தொகுதியினர் பற்றிய விபரங்கள்

2024 திசெம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உண்மையான பணியாட் தொகுதியினர் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | 31/12/2024ஆம் திகதிக்கு ஊழியர் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை | வெற்றிடமாக உள்ள எண்ணிக்கை |
| சிரேஷ்ட மட்டம் | 137 | 91 | 46 |
| மூன்றாம் நிலை மட்டம் | 197 | 173 | 24 |
| இரண்டாம் நிலை மட்டம் | 692 | 639 | 53 |
| ஆரம்ப மட்டம் | 251 | 218 | 33 |
| **மொத்தம்** | **1277** | **1121** | **156** |

பணியகத்தின் பணியாட்டொகுதியில் 156 வெற்றிடங்கள் காணப்படுவதாகவும், அவற்றில் முகாமைத்துவ உதவியாளர் தொகுதியில் 40 பதவி வெற்றிடங்கள், பிரதிப் பொது முகாமையாளர் மட்டத்திலான 4 வெற்றிடங்கள் மற்றும் முகாமைத்துவ மட்டத்திலான 24 வெற்றிடங்கள் உள்ளடங்குவதையும் குழு அவதானித்தது. நீதிமன்றத் தடையுத்தரவு காரணமாக ஆட்சேர்ப்பு செயல்முறை நிறுத்தப்பட்டமையே இந்த 40 முகாமைத்துவ உதவியாளர்

வெற்றிடங்கள் நிலவுவதற்குப் பிரதான காரணம் எனப் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

நிறுவனத்தின் பதவிகளில் வெற்றிடங்கள் ஏற்படுவதற்குப் பாதிப்பை ஏற்படுத்திய மற்றுமொரு காரணம் யாதெனில், கனிஷ்ட முகாமையாளரொருவர் முகாமைத்துவ மட்டத்திற்குப் பதவி உயர்வு பெறுவதற்கு 10 ஆண்டுகள் போன்ற நீண்ட காலம் எடுப்பதாகும் என குழுவிற்கு தெரிய வந்தது.

அதேபோன்று, 2018 ஆம் ஆண்டில் பதவி உயர்வுகளை வழங்குவதற்காக 'குறைகேள் குழு' ஒன்று நியமிக்கப்பட்டதாகவும், அக்குழுவின் தீர்மானங்களுக்கு எதிராக ஊழியர்கள் குழுவொன்று நிறுவனத்திற்கு எதிராக 2 அடிப்படை உரிமை மீறல் வழக்குகளைத் தாக்கல் செய்ததாகவும், அதற்கமைய உதவி முகாமையாளர் பதவி உயர்வுகள் தொடர்பாக உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தடையுத்தரவு சுமார் 5 வருடங்கள் வரை நீடித்ததாகவும், கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்வதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக 2023 ஆம் ஆண்டில் அந்த இரண்டு வழக்குகளும் மீளப் பெறப்பட்டுள்ளதாகவும் குழுவிற்கு தெரியவந்தது.

3 வாரங்களுக்குள் புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையைத் (SOR) தயாரித்து, அங்கீகாரம் பெறும் பணிகளை துரிதமாக நிறைவு செய்து குழுவிடம் சமர்ப்பிக்குமாறு குழுவினால் விதந்துரைக்கப்பட்டதுடன், அதற்கமைய ஆட்சேர்ப்பு நடைமுறையின் (SOR) இறுதி வரைவு, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, விடயப்பரப்பிற்கு பொறுப்பான அமைச்சின் மேலதிக செயலாளர் (நிர்வாகம்)அவர்களினால் 2025.04.24 ஆம் திகதியிடப்பட்டு

அனுப்பப்பட்ட கடிதம், 2025.05.22 ஆம் திகதியிடப்பட்டு குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு குறைகேள் குழுவினால் அநீதி இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் உதவி முகாமைத்துவப் பதவி நிலை ஊழியர்களின் பிரச்சினை குறித்து மீண்டும் ஆராய்ந்து தீர்வைப் பெற்றுக்கொடுக்குமாறு குழுவினால் விதந்துரைக்கப்பட்டிருந்தது.அதற்கமைய, குறிப்பிட்ட பதவி உயர்வுகள் தொடர்பான ஊழியர் குறைபாடுகள் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறை குறித்து ஆராய்வதற்கு குழுவொன்றை நியமிக்குமாறு கோரி 2025.04.02 மற்றும் 2025.05.02 ஆகிய திகதிகளில் விடயப்பரப்பிற்கு பொறுப்பான அமைச்சருக்குக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும், அது குறித்து மேலும் விளக்கமளிக்குமாறு 2025.05.14 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம் விடயப்பரப்பிற்கு பொறுப்பான அமைச்சின் செயலாளரினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் 2025.05.22 ஆம் திகதியுடைத்தாக குழுவிற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>**குழுவின் விதப்புரைகள்:**</u>
தற்போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் வழங்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறையை (SOR) துரிதமான அங்கீகரித்துச் செயற்படுத்தக்கூடிய மட்டத்திற்குப் பூர்த்தி செய்தல்.

## 3. <u>பணியகம் வீட்டுப் பணிப் பெண்களை சுற்றுலா விசா மூலம் வேலை ஒப்பந்தமின்றி ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமான் ஆகிய நாடுகளுக்கு அனுப்புதல்.</u>

1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தின் 53(3) பிரிவின்படி, இலங்கைக்கு வெளியே வேலைவாய்ப்பிற்காகச் செல்லும் ஒவ்வொரு இலங்கையரும்

பணியகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். எனினும், 2023 மார்ச் 20 திகதியிடப்பட்ட 07/2023 ஆம் இலக்க தலைவரின் சுற்றறிக்கை மூலம் 100 அமெரிக்க டொலர்களை வைப்பிலிட்டு, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமானுக்கு வேலை ஒப்பந்தம் இன்றி வீட்டுப் பணிப் பெண்களாகச் சுற்றுலா விசா மூலம் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அச்சுற்றறிக்கையின்படி, வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் 30 நாட்களுக்குள் வேலையை வழங்க வேண்டும், 45 நாட்களாகியும் வேலை கிடைக்காவிடில் சம்பந்தப்பட்ட முகவர் அந்தப் பணிப் பெண்களை மீண்டும் இலங்கைக்கு அழைக்க வேண்டும்.

கொவிட் பெருந்தொற்று மற்றும் அதன் பின்னரான பொருளாதார நெருக்கடி நிலையில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் கோரிக்கைக்கு இணங்க, சுற்றுலா விசா மூலம் தொழிலாளர்களை (குறிப்பாக வீட்டுப் பணிப் பெண்களை) ஐக்கிய அரபு இராச்சியம் போன்ற நாடுகளுக்கு அனுப்பும் முறையை பணியகம் அறிமுகப்படுத்தியுள்ளது. அந்நாடுகளில் நிலவும் 'தட்பீர்' (Tadbeer) பொறிமுறைக்கு அமைவாக, வேலை விசா வழங்குவதை விடக் குறைந்த செலவில் தொழிலாளர்களை அமர்த்துவதற்கு அந்நாட்டு முதலாளிகள் காட்டும் விருப்பமே இதற்கு காரணமாக அமைந்ததுள்ளது. சுற்றுலா விசா மூலம் அனுப்பப்படும் தொழிலாளர்களுக்கு 45 நாட்களுக்குள் வேலை தேடிக்கொடுக்கத் தவறினால், சம்பந்தப்பட்ட முகவர் நிறுவனம் கறை நிரல் பட்டியலில் சேர்க்கப்படும் என்றும், இணக்கப்பாட்டுப் பிரிவின் மூலம் தொழிலாளர்களை மீண்டும் இலங்கைக்கு அழைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

இருப்பினும், 2023 மார்ச் 20 முதல் 2024 யூன் 6 வரை, மேற்கூறிய இரண்டு நாடுகளுக்கும் சுற்றுலா விசா மூலம் 4,942 வீட்டுப் பணிப் பெண்கள் அனுப்பப்பட்டுள்ளனர். அவர்களில் 3,954 பேருக்கு வேலை வழங்கப்பட்டதற்கான ஆவணங்கள் தூதரகத்தின் கணினி அமைப்பில்

பதிவேற்றப்படவில்லை. மேலும், 2024 யூன் 06 ஆம் திகதியாகும் போது வெளிநாடு சென்ற அந்த வீட்டுப் பணிப் பெண்களிடமிருந்து ஐக்கிய அரபு இராச்சியத்தில் 225 முறைப்பாடுகளும், ஓமானில் 17 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. 2023 திசெம்பர் 21 ஆம் திகதியளவில் 11 பேர் துபாய் பாதுகாப்பு இல்லத்தில் தங்கியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

2025 பெப்ரவரி 25 ஆம் திகதியளவில் 6,290 தொழிலாளர்கள் சுற்றுலா விசா முறையில் வெளிநாடு சென்றிருந்த போதிலும், 4,300 பேரின் தரவுகள் மாத்திரமே பதிவேற்றப்பட்டுள்ளன. அவர்களில் 742 பேர் காணாமல் போயுள்ளதுடன், 365 பேர் 45 நாட்களுக்குள்ளும், 880 பேர் 45 நாட்களுக்கு மேலாகவும் வேலை இன்றி இருப்பதாகவும் குழுவில் வெளிப்படுத்தப்பட்டது.

இதன்படி, நிறுவனம் தனது பொறுப்பை முற்றாகக் கைவிட்டு மனிதக் கடத்தல் போன்ற செயலில் ஈடுபட்டிருப்பது போன்ற ஒரு தன்மையே இங்கு காணப்படுவதாக குழு அவதானித்தது.

பணியகத்தின் ஒழுங்குறுத்தும் வகிபாகத்தைப் பிரதிபலிக்கும் வகையில், 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தின் 5 (1) (ஈ), 14.1 மற்றும் 14.3 ஆகிய பிரிவுகளைத் திருத்துமாறு முன்மொழியப்பட்ட குழுவின் விதப்புரைக்கு அமைவாக வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை பிரதியமைச்சரின் தலைமையில் 2025.04.09 அன்று நடைபெற்ற கலந்துரையாடல் தொடர்பான குறிப்புக்கள் 2025.04.30 ஆம் திகதியிடப்பட்டு குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமான் ஆகிய நாடுகளுக்கு வேலை ஒப்பந்தம் இன்றி சுற்றுலா விசா மூலம் வீட்டுப் பணிப் பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் திட்டத்தில் காணப்பட்ட குறைபாடுகள் மற்றும் அதன் மூலம் வெளிநாடு சென்றவர்களுக்கு ஏற்பட்டுள்ள ஒட்டுமொத்த பாதிப்புகள் குறித்து தாபனக் கோவைக்கு இணங்க விசாரணையொன்றை நடத்தி, அறிக்கையொன்றைத் தயாரித்து குழுவிடம் சமர்ப்பிக்குமாறும், அதற்கமைய சம்பந்தப்பட்ட நபர்களுக்கு உரிய தண்டனைகளை வழங்குமாறும் குழு விதந்துரைத்தது. அதற்கமைய, விசாரணை அதிகாரியொருவரை நியமிக்குமாறு கோரி நிரல் அமைச்சின் மேலதிக செயலாளரினால் 2025.06.09 ஆம் திகதியிடப்பட்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதியொன்று குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பெண்களை வீட்டுப் பணிப் பெண்களாக வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கான முறையான நடைமுறையொன்றைத் தயாரித்து, அதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து அதனை குழுவிடம் சமர்ப்பிக்குமாறு குழுவினால் விதந்துரைக்கப்பட்டதுடன், அதற்கமைய அமைச்சரவைப் பத்திரமொன்று வரைபு செய்யப்பட்டு அமைச்சரின் கவனத்திற்கு முன்வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக 2025.05.22 ஆம் திகதியிடப்பட்டு குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2023 மார்ச் 20 ஆம் திகதியிடப்பட்ட 07/2023 ஆம் இலக்க தவைவரின் சுற்றறிக்கையானது பணியகச் சட்டத்தின் 53(3) ஆம் பிரிவை மீறும் வகையிலும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றியும் வெளியிடப்பட்டுள்ளதால், அது தொடர்பான அனைத்துச் சுற்றறிக்கைகளையும் இரத்து செய்யுமாறு குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிருந்ததுடன் அதற்கமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக 2025.04.30 ஆம் திகதியிடப்பட்டு குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றறிக்கையின் கீழ் வெளிநாடு சென்ற வீட்டுப் பணிப் பெண்களிடமிருந்து ஐக்கிய அரபு இராச்சியம் தொடர்பாகக் கிடைத்த 225 முறைப்பாடுகள் மற்றும் ஓமான் தொடர்பாகக் கிடைத்த 17 முறைப்பாடுகள் தொடர்பில், அவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிய முகவர் நிலையங்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து குழுவிற்கு அறிவிக்குமாறு விதந்துரைக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் 2025.04.30 ஆம் திகதியிடப்பட்டு குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதோடு, அதற்கமைய சம்பந்தப்பட்ட முகவர் நிலையங்களுக்கு எதிரான விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தூதரகத்தின் தகவல் கணினி அமைப்பில் பதிவேற்றப்படாத 880 வீட்டுப் பணிப் பெண்கள் சம்பந்தமாக அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு குழுவினால் விதந்துரைக்கப்பட்டிருந்ததுடன், அதற்கமைய அது தொடர்பான அறிக்கை 2025.04.30 ஆம் திகதியிடப்பட்டு குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பான சேவை ஒப்பந்தங்களைச் சமர்ப்பிக்குமாறு குழுவினால் விதந்துரைக்கப்பட்டிருந்ததுடன், அதற்கமைய அந்தச் சேவை ஒப்பந்தங்கள் 2025.04.01 ஆம் திகதியிடப்பட்டு குழுவிடம் வழங்கப்பட்டுள்ளன.

## 4. <u>வதிவிடப் பயிற்சி அளிக்காமல் வீட்டுப் பணிப் பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் முறையினால் பணியகத்திற்கு நட்டம் ஏற்படுதல்</u>.

முதன்முறையாக வெளிநாடு செல்லும் வீட்டுப் பணிப் பெண்களுக்குப் பரிசு பற்றுச்சீட்டுக்களை வழங்கும் திட்டத்திற்காக 2023 ஒற்றோபர் 13 ஆம் திகதி பணியகத்தினால் 13.86 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருந்தது. அதற்கென 10,000 ரூபாய் பெறுமதியுள்ள 14,000 பற்றுச்சீட்டுக்களும், தலா 2,500 ரூபாய் பெறுமதியுள்ள 28,000 பற்றுச்சீட்டுக்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.2024 ஓகத்து 14 ஆம் திகதியாகும் போது 128,229,300 ரூபாய் பெறுமதியான 13,005 பற்றுச்சீட்டுக்கள் பயன்படுத்தப்படாமல் எஞ்சியிருந்தன. முதன்முறையான வெளிநாடு செல்லும் பெண்கள் ஏற்கனவே வெளிநாடு சென்றிருந்ததற்கான ஆவணங்களைச் சமர்ப்பித்து பயிற்சியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தமை மற்றும் விழா நடத்தப்படுவது தாமதமானமை ஆகியவையே இதற்கு காரணமாக அமைந்திருந்தன.

முதன்முறையாக வெளிநாடு செல்லும் வீட்டுப் பணிப் பெண்களுக்காக, 2022 யூன் 07 ஆம் திகதியிடப்பட்ட பணியகத்தின் தலைவரின் கடிதத்திற்கும், 2023 சனவரி 09 ஆம் திகதியிடப்பட்ட பிரதிப் பொது முகாமையாளரின் (பயிற்சி) கடிதத்திற்கும் முரணாக, 22,410 ரூபா கட்டணத்தை அறவிட்டு 28 நாட்கள் (NVQ மட்டம் 3) தங்குமிடப் பயிற்சியை வழங்காமல், 2023 சனவரி முதல் 2024 மே 29 வரையான காலப்பகுதிக்குள் 28,165 வீட்டுப் பணிப் பெண்கள் முதன்முறையாக வெளிநாடு அனுப்பப்பட்டுள்ளமையினால், 631,177,650 ரூபா பயிற்சி வருமானத்தை பணியகம் இழந்துள்ளது.

2022 ஆம் ஆண்டு யூன் மாதம் முதல் குறைந்தது 150 நாட்கள் வெளிநாட்டில் தங்கியிருந்த தொழிலாளர்களுக்கு, பயிற்சியின்றி நிகழ்நிலையில் அனுமதியைப் பெற்று மீண்டும் வெளிநாடு செல்வதற்கு

அனுமதி வழங்குவதற்கு, முன்னாள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அலுவல்கள் அமைச்சரின் அறிவுறுத்தலின் பேரில் பணியகத்தின் முன்னாள் தலைவர் நடவடிக்கை எடுத்துள்ளதாக குழுவிற்குத் தெரியவந்தது.

இருப்பினும், ஒழுங்குமுறைகளுக்குப் புறம்பான இந்நடைமுறையினால், முதன்முறையாக வெளிநாடு செல்லும் வீட்டுப் பணிப் பெண்கள் பணியகத்தைத் தவறாக வழிநடத்தி, தமக்கு முன்னனுபவம் இருப்பதாகக் காட்டி முறையான பயிற்சியின்றி வெளிநாடு சென்றமையால் அவர்களுக்குப் பல சிக்கல்கள் ஏற்பட்டதோடு, பணியகத்திற்கு கிடைக்க வேண்டிய பயிற்சி வருமானமும் இழக்கப்பட்டது.

அதேபோன்று, இச்செயற்பாட்டின் ஊடாக 683 இள வயதினர் வெளிநாடு சென்றுள்ளதாகவும், முறையான பயிற்சி பெறாத தொழிலாளர்கள் சம்பந்தமாக 1,925 புகார்கள் கிடைத்துள்ளதாகவும், வெளிநாடு செல்லும் பெண்களின் குடும்பங்கள் மற்றும் பிள்ளைகள் தொடர்பாகப் பல சமூகப் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் பொது முகாமையாளர் தனது பொறுப்புகளை நிறைவேற்றத் தவறியுள்ளது என்பதையும் குழு அவதானித்தது.

மேற்படி நடைமுறையை முன்னெடுத்தமை தொடர்பில் பொது முகாமையாளரின் செயற்பாடுகள் குறித்து விசாரணையை நடத்தி அது தொடர்பான அறிக்கையை குழுவிற்கு வழங்குமாறு விதந்துரைக்கப்பட்டதற்கு அமைய, அந்த அறிக்கை 2025.05.20 ஆம் திகதியிடப்பட்டு குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், வதிவிடப் பயிற்சியின்றி வீட்டுப் பணிப் பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவது தொடர்பாகப் பொது முகாமையாளரினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையை குழுவிடம் சமர்ப்பிக்குமாறு விதந்துரைக்கப்பட்டதற்கு

அமைய, அந்தச் சுற்றறிக்கை 2025.03.11 ஆம் திகதியிடப்பட்டு குழுவிடம் வழங்கப்பட்டுள்ளது.

## 5. <u>வேலைவாய்ப்பு சந்தை திட்டங்களுக்குக் கூடங்களை வாடகைக்கு எடுப்பதில் முறையான பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றாமை.</u>

பணியகத்தினால் நடத்தப்பட்ட வேலைவாய்ப்புச் சந்தை வேலைதிட்டங்களில் வர்த்தகக் கூடங்களைக் கொள்வனவு செய்ததில் பாரிய நிதி முறைகேடுகள் மற்றும் வெளிப்படைத்தன்மை தொடர்பான சிக்கல்கள் இருப்பதை குழு அவதானித்தது.

2022ஆம் ஆண்டு ஒக்தோம்பர் மாதம் 15 மற்றும் 16ஆந் திகதிகளில் காலியில் நடைபெற்ற நிகழ்விற்கு ஒரு கூடம் 170,000 ரூபாய் வீதம் 30 வர்த்தகக் கூடங்கள் வாடகைக்கு எடுக்கப்பட்டன. ஆனால் 2023ஆம் ஆண்டு யூலை மாதம் 15 மற்றும் 16ஆந் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வேலைவாய்ப்பு சந்தை நிகழ்விற்காக அதன் விலை 300,000 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டு, ஒரு கூடாரம் 500,000 ரூபாய் வீதம் 25 கூடங்கள் ஒரே தனியார் நிறுவனத்திடம் இருந்து வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளன. 2023ஆம் ஆண்டு மே மாதம் 29ஆந் திகதி தொழில் அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் மீது, 25 கூடங்களுக்கும் செயலாளரின் மேற்பார்வையின் கீழ் ரூ.12.5 மில்லியன் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், 2024 ஆம் ஆண்டில் "ஜயகமு ஸ்ரீலங்கா" திட்டத்தின் கீழ் 24 மாவட்டங்களில் நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு சந்தைகளுக்காக 542.8 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாகவும், முழு வேலைத்திட்டத்திற்கும் 1.25 பில்லியன் ரூபாய் செலவு செய்யப்பட்ட போதிலும், 2024ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆந் திகதியில் இவ்வேலைத்திட்டம் மூலம் வெளிநாடு சென்றுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை வெறும் 336 மாத்திரமே என குழுவுக்கு தெரியவந்துள்ளது.

500 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான இந்த அமைச்சு மட்டத்திலான பெறுகை அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படாமை பாரதூரமான விடயமாகக் கருதப்படுவதால், இது குறித்து கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் முழுமையான விசாரணை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சிகளுக்காகத் தேவையான விற்பனைக் கூடங்களை, முறையான பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றாமல் ஒரே தனியார் நிறுவனத்திடமிருந்து வாடகைக்குப் பெற்றுக்கொண்டமைக்காக 12,500,000 ரூபாயைச் செலுத்தியமை தொடர்பில் அமைச்சு விசாரணையொன்றை நடத்த வேண்டும் என குழுவினால் விதந்துரைக்கப்பட்டதுடன், அதற்கமைய குறித்த விசாரணையை கணக்காய்வாளர் நாயகத்தின் ஊடாக மேற்கொள்வதற்கு அமைச்சினால் 2025.04.01 ஆம் திகதியிடப்பட்டு குழுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டமைக்கமைவாக அதற்கான குழுவின் தவிசாளரின் இணக்கம் 2025.04.28 ஆம் திகதியிடப்பட்டு அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

முழுத் திட்டத்திற்காகவும் பணியக பெறுகைக் குழுக்களினால் மேற்கொள்ளப்பட்ட பெறுகைகளுடன் தொடர்புடைய அனைத்து ஆவணங்களும் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட விதந்துரைக்கு இணங்க, அந்த ஆவணங்கள் 2025.04.01 ஆம் திகதியிடப்பட்டு குழுவிடம் வழங்கப்பட்டுள்ளன.

## 6. ஓமான் தூதுவராலயத்தின் தொழிலாளர் நலன்புரிப் பிரிவின் 2022 ஓகத்து முதல் திசெம்பர் வரையான கொடுப்பனவு பற்றுச்சீட்டுக்கள் நிதிப் பிரமாணங்கள் 273 இன் படி இதுவரையில் கணக்காய்வாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பிக்கப்படாமை.

கணக்காய்வு ஐயவினாவுக்கான பதிலாக, பற்றுச்சீட்டுக்களை நாட்டிற்கு அனுப்புவதற்கு அதிக செலவு ஏற்படுவதால் எதிர்காலத்தில் இந்தச் செயன்முறையை டிஜிட்டல் மயமாக்க எதிர்பார்ப்பதாக பணியகத்தின் பதில் தலைவரின் கையொப்பத்துடனான கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், பற்றுச்சீட்டு படிவங்களை வழங்காத நோக்கம் அதனூடாகப் புலப்படுவதாக கணக்காய்வாளர் தலைமையதிபதி கொண்டுள்ள கருத்துத் தொடர்பில் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், ஓமான் தூதுவராலயத்தின் ஆலோசகராகப் பணியாற்றிய பிரதிப் பொது முகாமையாளர்) சட்டம் (அவர்களினால் அனைத்து பற்றுச்சீட்டுக்களும் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அவை கிடைக்கப்பெற்ற பின்னர் பதில் பிரதிப் பொது முகாமையாளர்) நிதி (அவர்களினால் தேசிய கணக்காய்வு அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன .பின்னர் பற்றுச்சீட்டு படிவங்களை மேலதிக நடவடிக்கைகளுக்காக பதுளையில் அமைந்துள்ள உப அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பதற்குச் சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

தலைமை அலுவலகத்தில் இடவசதி மற்றும் பணியாட்டொகுதி பற்றாக்குறை நிலவுவதாலும், பதுளை உப அலுவலகத்தில் போதிய இடவசதி காணப்படுவதால் மற்றும் அநேகமான பணியாட்டொகுதியினர் பதுளைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தினாலும் 'Back Office' எண்ணக்கருவின் கீழ் பற்றுச்சீட்டுக்களை வைப்புச் செய்தல் மற்றும் ஏனைய விசேட பணிகள் அந்த அலுவலகத்தில் முன்னெடுக்கப்படுகின்றன .செயற்பாட்டு மேற்பார்வைக்காகத் தலைமை அலுவலகத்திலிருந்து கணக்கீட்டு உத்தியோகத்தர் ஒருவரும், உப அலுவலகத்திலிருந்து முகாமையாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளதுடன், தூதுவராலயக் கணக்கீட்டுப் பணிகளுக்காக நான்கு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சம்பந்தப்பட்ட பற்றுச்சீட்டு படிவங்களை நாட்டிற்கு கொண்டுவருவதற்கு முறையான வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்குமாறு குழுவினால் விதந்துரைக்கப்பட்டிருந்ததுடன், அதற்கமைய முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக 2025.05.22 ஆம் திகதியிடப்பட்டு குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பணியகத்தின் கீழ் பதுளைப் பிரதேசத்தில் அமைந்துள்ள பிரதேச அலுவலகம் நிறுவப்பட்ட பின்னணி, பணியகத்தின் பணிகள், இணைக்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் தொடர்ந்து அந்த அலுவலகத்தைப் பராமரிப்பதன் அவசியம் குறித்து முழுமையான ஆய்வின் பின்னர் விரிவான அறிக்கையொன்றைத் தயாரித்துக் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு விதந்துரைக்கப்பட்டிருந்ததுடன், அதற்கமையத் தொடர்புடைய அறிக்கை 2025.04.30 ஆம் திகதியிடப்பட்டு குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 7. <u>குவைத் நட்டஈட்டு நிதியக்கணக்கு</u>

1991 ஆம் ஆண்டு முதல் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நிலவுகின்ற சுமார் 5.1 பில்லியன் ரூபா குவைத் நட்டஈட்டு நிதி தொடர்பில் முகாமைத்துவம் எவ்வித தீர்மானத்தையும் எடுக்காமை குறித்துக் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

நட்டஈட்டுக் கோரிக்கையாளர்கள் 948 பேரின் பெயர்ப்பட்டியல் இருந்தபோதிலும், தேவையான ஆவணங்கள் இன்மையால் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாமல் போயுள்ளதாகவும், 1997 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை செலுத்தப்படாத பணத்தை முதலீடு செய்து 4,960,937,306 ரூபா வட்டி வருமானமாக ஈட்டப்பட்டுள்ளதாகவும், 2023 மார்ச் மற்றும் ஏப்பிரல் மாதங்களில் ஓய்வூதியத் திட்டம் மற்றும் கடன் திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்த போதிலும் அந்த நிதி இதுவரை பயன்படுத்தப்படவில்லை எனவும், 2007 நவெம்பர் 19 ஆம் திகதி விண்ணப்பித்த புலம்பெயர்ந்த தொழிலாளி ஒருவரின் அனைத்து ஆவணங்களும் அங்கீகரிக்கப்பட்டு 15

ஆண்டுகள் கடந்தும் அவருக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதையும் குழு அவதானித்தது.

35 ஆண்டுகள் கடந்துள்ள குவைத் நட்டஈட்டுத் தொகையைக் கோருவதற்கு, பெயர்ப்பட்டியலில் உள்ள 948 தொழிலாளர்களில் எவரும் முன்வராத காரணத்தினால், பணியகத்திற்கு அவர்களது சேவையை உறுதிப்படுத்த முடியாமல் போயுள்ளதாகவும், நிதியைப் பயன்படுத்தி ஓய்வூதிய சம்பளத் திட்டமொன்றிக்காக 2023.04.24 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும், பல்வித கடன் திட்டத்திற்கு அங்கீகாரம் கிடைக்காவிட்டாலும், பணியகத்தின் நலன்புரி நிதியைப் பயன்படுத்தி அத்தகைய கடன் திட்டத்தை ஆரம்பித்து தற்போது 138 நபர்களுக்கு 260 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது என்பதையும் குழு அவதானித்தது.

செயலற்றுக் கிடக்கும் இந்த நிதியில் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி நிலவிய 5.1 பில்லியன் ரூபா மீதியைப் பயன்படுத்தித் தொழிலாளர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு அனுப்பும் போது தேவையான பயிற்சித் திட்டங்களை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்து அறிக்கையொன்றை வழங்குமாறு குழுவினால் விதந்துரைக்கப்பட்டிருந்ததுடன், அதற்கமையத் தயாரிக்கப்பட்ட கோரிக்கையை மேலும் ஆராய்ந்து, அதனை நிறுவனத்தின் கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டத்தில் உள்வாங்குமாறு விதந்துரைத்து பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட தீர்மானம் (Board Decision), 2025.05.22 ஆம் திகதியிடப்பட்டு குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 8. <u>வெளிநாட்டுத் தூதுக்குழுக்களுக்கு உத்தியோகத்தர்களை நியமித்தல்</u>

வெளிநாட்டுத் தூதுக்குழுக்களில் உள்ள தொழிலாளர் நலன்புரிப் பிரிவுகளுக்காகப் பணியக உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்யும் நிலைமைகள் குறித்துக் குழு கவனம் செலுத்தியது.

2023 ஏப்பிரல் மாதம் 06 ஆம் திகதியிடப்பட்ட 01/2023 இலக்கத் தலைவரின் சுற்றறிக்கையின்படி, இதற்கு முன்னர் தூதுக்குழு சேவையில் ஈடுபடாத விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட வேண்டுமெனவும், அதேபோன்று வெளிநாட்டுச் சேவையை நிறைவு

செய்த உத்தியோகத்தர்கள் மீண்டும் விண்ணப்பிப்பதற்கு முன்னர் பணியகத்தில் 3 வருடச் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் எனவும், முன்னர் வெளிநாட்டுத் தூதுக்குழு சேவையில் ஈடுபட்டிருந்த பணியகத்தின் 07 உத்தியோகத்தர்கள் மீண்டும் 2023 ஆம் ஆண்டில் வெளிநாட்டுத் தூதுக்குழு சேவைக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்களில் இருவர் மூன்றாவது மற்றும் நான்காவது தடவையாகச் சேவையை நிறைவு செய்து வந்த உத்தியோகத்தர்கள் எனவும், வெளிநாட்டுத் தூதுக்குழு சேவையை நிறைவு செய்து 3 ஆண்டுகள் பூர்த்தியாகாத உத்தியோகத்தர் ஒருவரும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் குழு அவதானித்தது .

தற்போது 13 நாடுகளில் 15 தொழிலாளர் நலன்புரிப் பிரிவுகள் காணப்படுவதாகவும், 2023 சனவரி 07 ஆம் திகதி புதிய ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக முன்னாள் தலைவரின் சுற்றறிக்கைக்கு அமைய ஆட்சேர்ப்புகள் இடம்பெற்றுள்ளதாகவும், சில சந்தர்ப்பங்களில் புதிய நடைமுறையைப் பின்பற்றாமல், வெளிவாரியாக நபர்களைத் ஆட்சேர்ப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தின் 14(1) பிரிவின் கீழ் முன்னாள் அமைச்சரின் விதந்துரையும் பெறப்பட்டுள்ளதாகத் தெளிவான முரண்பாடு காணப்படுவதாகக் குழுவிற்கு வெளிப்படுத்தப்பட்டது .அரசியல் தலையீடுகள் காரணமாக உள்வாரியான ஆட்சேர்ப்புகள் குறித்துப் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், முன்னாள் அமைச்சரால் வெளிவாரியாக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் செயலாற்றுகை தொடர்பிலும் பிரச்சினைகள் காணப்படுகின்றன என்பதையும் குழு அவதானித்தது.

வெளிநாட்டுத் தூதுக்குழுக்களுக்கு உத்தியோகத்தர்களை நியமிக்கும் போது 2023 ஏப்பிரல் 06 ஆம் திகதிய 01/2023 இலக்கத் தலைவரின் சுற்றறிக்கையின் விதிகளை மீறி மேற்கொள்ளப்பட்டுள்ள நியமனங்களை விசாரிப்பதற்கு ஒரு குழுவை நியமித்து அதனூடாக முறையான விசாரணையை நடாத்தி ஆட்சேர்ப்பு தொடர்பான சிக்கல்களைத் தீர்க்குமாறு குழுவினால் விதந்துரைக்கப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக ஆலோசனைகளை வழங்குமாறு பணியகத்தினால்

2025.03.20 ஆம் திகதியிடப்பட்டு நிரல் அமைச்சிற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும், விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடன் கலந்துரையாடி விரைவில் இதற்கு நடவடிக்கை எடுப்பதாக 2025.05.22 ஆம் திகதியிடப்பட்டு பணியகத்தினால் குழுவிற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## <u>2025.05.23 ஆம் திகதி கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்ட விடயங்கள்</u>

### 01. <u>பணியகம் வேலைவாய்ப்புகளுக்காகப் வீட்டுப்பணிப்பெண்களை ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமான் இராச்சியத்திற்குச் சுற்றுலா விசாவில் வேலை ஒப்பந்தம் இன்றி வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்தல்</u>

பணியகத்தினால் முறையான தெரிவு நடைமுறைகளைப் பின்பற்றாமல் அவசர ஆட்சேர்ப்புகள் ஊடாகத் தகுதியற்ற பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டதன் மூலம் ஒட்டுமொத்த ஒழுங்குமுறைச் செயன்முறையும் மீறப்பட்டுள்ளதாகக் குழு அவதானித்தது .குறிப்பாக 45 நாட்கள் காலப்பகுதிக்காகச் சுற்றுலா விசாவில் வெளிநாடு செல்லும் தொழிலாளர்கள் குறித்து அல்லது அவர்களுக்கு வேலை கிடைத்ததா என்பது குறித்து பணியகம் முறையான பின்தொடர்தல் அல்லது ஒழுங்குபடுத்தலைச் செய்யாமை குறித்துக் குழு தனது அதிருப்தியை வெளியிட்டது.

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கருத்திற்கு இணங்க, 2023 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 07/2023 மற்றும் 10/2023 இலக்கத் தலைவரின் சுற்றறிக்கைகள் மூலம் ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமான் இராச்சியத்திற்குச் சுற்றுலா வீசா மூலம் வீட்டுப்பணிப்பெண்களை அனுப்புவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது .அங்கு முகவர் நிலையங்களினால் தொழிலாளர் ஒருவருக்காக 100 அமெரிக்க டொலர்கள் நிர்வாகக் கட்டணமாக வைப்புச் செய்யப்பட வேண்டும் என்ற போதிலும் அது முறையாக நிறைவேற்றப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது .2025.03.07 ஆம் திகதி வரை வழங்கப்பட்டுள்ள தரவுகளுக்கு இணங்க இந்த முறையின் கீழ் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு

5,672 பேரும் ஓமான் இராச்சியத்திற்கு 629 பேரும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதுடன், அவர்களில் 1,310 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கப்பெறவில்லை.

மேலும், 45 நாட்கள் கடந்தும் தரவுக் கட்டமைப்பில் தகவல்கள் உள்ளிடப்படாத 318 தொழிலாளர்கள் இருப்பதாகவும், சில தரப்பினர் 2 ஆண்டுகள் கடந்தும் தகவல்களை இற்றைப்படுத்தப்படவில்லை எனவும் தெரிய வந்தது எந்தத் .தகவலும் இல்லாத தொழிலாளர்களின் எண்ணிக்கை 818 ஆகும் .எவ்வாறாயினும், 2025.05.21 ஆம் திகதியாகும் போது இந்த எண்ணிக்கையை 225 ஆகக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், தரவுகளை வழங்கத் தவறிய 103 முகவர் நிலையங்களின் செயற்பாடுகள் தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்பதையும் குழு அவதானித்தது .

2024 யூன் வரையான சில ஆண்டுகளில் வேலைவாய்ப்புக்காகத் தொழிலாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் போது பாரிய சட்ட மீறல்கள் இடம்பெற்றுள்ளதாகவும், அது தொடர்பாக முன்னாள் தலைவர் ஒருவருக்கு எதிராகக் கணக்காய்வு விசாரணை மற்றும் 6 உத்தியோகத்தர்களின் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டு ஒழுக்காற்று விசாரணைகளும் நடத்தப்படுவதாகவும் அவதானிக்கப்பட்டது .இனிவரும் காலங்களில் 150 நாட்கள் வெளிநாட்டு அனுபவத்தைக் கொண்டிராத ஒவ்வொரு தொழிலாளியையும் பயிற்சியின் பின்னரே வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதற்கு பணியகம் உடன்பட்டது.

**<u>குழுவின் விதந்துரைகள்</u>**

i. வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்வதற்கு எதிர்பார்க்கும் தொழிலாளர்களை விழிப்புணர்வூட்டுவது தொடர்பான பணியகத்தின் ஒழுங்குமுறைப் பணியை, உள்வாரிச் சுற்றறிக்கை மூலம் தொழிலாளர்களுக்குத் தெரியப்படுத்துவதற்குப் பதிலாக, அது குறித்த நிபந்தனைகளை நிரல் அமைச்சின் ஊடாக அமைச்சரவை அங்கீகாரத்துடன் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்து செயற்படல்.

ii. வீட்டுப்பணிப்பெண்களை ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமான் இராச்சியத்திற்குச் சுற்றுலா வீசாவில் வேலை ஒப்பந்தமொன்று இன்றி வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கும் செயன்முறைக்குத் திட்டவட்டமாகப் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்/உத்தியோகத்தர்கள் குறித்துக் குழுவிற்குத் தெரியப்படுத்தல்.

iii. தகவல்கள் பதிவேற்றப்படாத 818 தொழிலாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அந்த நிறுவனங்களுக்கு எதிராகப் பணியகத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் உள்ளிட்ட முழுமையான அறிக்கையை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கும் பிரதியொன்றுடன் குழுவிற்கு வழங்குதல்.

iv. 45 நாட்களுக்குள் தொழிலாளர்களின் தகவல்களைப் பணியகத்திற்கு வழங்கத் தவறும் முகவர் நிலையங்கள் தற்காலிகமாகத் தடை செய்யப்படும் என்பது குறித்த ஒழுங்குபடுத்தல் செயற்பாடு தொடர்பில் வெளிநாடு செல்வதற்கு முன்னர், தொழிலாளர்களுக்குப் பணியகத்தினால் வழங்கப்படும் பயிற்சியில் உள்ளடக்கி அது குறித்து அவர்களைத் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுத்தல்.

v. புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் தகவல்களை 45 நாட்களுக்குள் பணியகத்திற்கு வழங்கத் தவறும் முகவர் நிலையங்களைத் தற்காலிகமாகத் தடை செய்வதன் காரணமாக, அவ்வாறு தடை செய்யப்பட்ட நிறுவனங்கள் மூலம் வெளிநாடு சென்றுள்ள தொழிலாளர்கள் மற்றும் வெளிநாடு செல்லும் எதிர்பார்ப்பில் அந்த முகவர் நிலையங்களுடன் பணம் மற்றும் ஏனைய கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களைத் தவிர்க்கக் கூடிய வகையிலான பரிகாரங்களுடன் கூடிய திட்டவட்டமான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்.

vi. 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் படி முகவர் நிலையங்களினால் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படும் புலம்பெயர்ந்தோரின் தரவுகளை உள்ளடக்கிப் பராமரிக்கப்படும் A,B,C,D ஆகிய நான்கு புத்தகங்களையும் 2 மாத காலத்திற்குள் டிஜிட்டல் மயமாக்கிப் பணியகத்தின் தகவல் கட்டமைப்பில் பதிவேற்ற நடவடிக்கை எடுத்தல்.

vii. தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டுள்ள முகவர் நிலையங்கள் குறித்துப் பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டுள்ள

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடன் தொடர்புடைய அபிவிருத்தி உத்தியோகத்தர்களைத் தெளிவுபடுத்துவதன் மூலம், வேலைவாய்ப்புகளுக்காக அந்த முகவர் நிலையங்கள் ஊடாக வெளிநாடு செல்வதற்கு எதிர்பார்க்கும் தொழிலாளர்களுக்கு அந்தத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்.

viii. சுற்றுலா விசாவில் தொழிலாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதற்குப் பதிலாக வேலை வீசாவைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

## 02. குவைத் நட்டஈட்டு நிதிக்கணக்கு

2025.02.27 ஆம் திகதி வழங்கப்பட்ட குழு விதந்துரைகளைச் செயற்படுத்தப் பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளதாகவும், அதற்கமைய 5.1 பில்லியன் ரூபா குவைத் நட்டஈட்டு நிதியை இரண்டு பகுதிகளாகப் பிரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்பதையும் குழு அவதானித்தது .

1. **3 பில்லியன் ரூபா :**ஹோமாகம கணினிப் பயிற்சி மையமொன்று மற்றும் அம்பாறையில் புலம்பெயர்ந்தோர் வள மையமொன்று நிர்மாணித்தல் உள்ளிட்ட பயிற்சித் திட்டங்களுக்காகப் பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. **2.1 பில்லியன் ரூபா :**60 வயதைப் பூர்த்தி செய்த புலம்பெயர்ந்த வீட்டுப் பணிப்பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும்.

இதற்கு மேலதிகமாக, சமூகப் பாதுகாப்புச் சபையுடன் இணைந்து 60 வயது பூர்த்தியடைந்த பின்னர் வீட்டுப் பணிப்பெண்களுக்கு மாதம் 20,000 ரூபா ஓய்வூதியம் வழங்கப் பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளதாகவும், இந்தத் திட்டத்திற்காக ஆண்டுதோறும் 1 பில்லியன் ரூபாவைச் சுழற்சி நிதியொன்றிற்கும்) Revolving Fund) பங்களிப்பு ஓய்வூதியத்திலிருந்து 20% ஐயும் வழங்க எதிர்பார்ப்பதாகவும், இந்தப் பணிப்பாளர் சபை தீர்மானத்தை அமைச்சரவை அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்க எதிர்பார்ப்பதாகவும் குழுவிற்கு வெளிப்படுத்தப்பட்டது .

மேலும், 18 பில்லியன் ரூபா நிலையான வைப்புகள் பணியகத்திடம் காணப்படுவதையும் அவதானித்தது .

**குழுவின் விதப்புரை**

2025 - 2030 வரையான காலப்பகுதிக்காக நிறுவனத்திற்கான கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரிக்கும் போது குவைத் இழப்பீட்டு நிதி மற்றும் பணியகத்திலுள்ள ஏனைய நிதிகளைப் பயன்படுத்துவதற்கான திட்டங்களை அதில் உள்ளடக்கல்.

## 03. ரட்டவிருவோ வீடமைப்புத் திட்டக் கடன் கருத்திட்டம்

2013 சனவரி 24 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கிணங்க, இலங்கைச் சமுர்த்தி அதிகாரசபையுடன் 'ரட்டவிருவோ' எனப்படும் வீடமைப்புத் திட்டக் கடன் கருத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக 05 வருடங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் பணியகம் கையொப்பமிட்டது .இந்த ஒப்பந்தத்தின் கீழ், பணியகத்தினால் 2013 மார்ச் 08 ஆம் திகதி சமுர்த்தி அதிகாரசபைக்கு 100 மில்லியன் ரூபா பணம் குறித்த கடன் திட்டத்திற்காகப் பிணையாக வைப்புச் செய்யப்பட்டது .

கடன் திட்டம் நிறைவடைந்த பின்னர் அந்தத் தொகை மற்றும் திரட்டப்பட்ட வட்டியும் பணியகத்திற்குக் கிடைக்க வேண்டும் என்பதையும் குழு அவதானித்தது.

எவ்வாறாயினும், 2018 மார்ச் 07 ஆம் திகதிக்குப் பின்னர் இந்த ஒப்பந்தத்தின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்த போதிலும், திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்பட்டமை குறித்து எவ்விதத் தகவலும் பணியகத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும், 2024 திசெம்பர் 31 ஆம் திகதியாகும் போது, இந்தத் தொகை திரட்டப்பட்ட வட்டியுடன் 341.7

மில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளதாகவும் குழுவிற்கு வெளிப்படுத்தப்பட்டது.

இந்தக் கடன் திட்டத்தின் கீழ் தலா 3 இலட்சம் ரூபா வீதம் சுமார் 12,000 வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்குக் கடன் வழங்க எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், கடன் பெற்ற நபர்களின் விபரங்களைச் சமுர்த்தி அதிகாரசபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப் பணியகம் தவறியுள்ளதாகவும், புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு இணங்க நிறுவப்பட்டிருக்க வேண்டிய திட்ட ஒருங்கிணைப்புக் குழுவொன்று நியமிக்கப்படவில்லை என்பதையும் குழு அவதானித்தது.

2025 ஏப்பிரல் 10 ஆம் திகதி நடத்தப்பட்ட கலந்துரையாடலொன்றில், சமுர்த்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சபை 341.7 மில்லியன் ரூபா பணத்தைப் பணியகத்திற்கு விடுவிக்க உடன்பட்டுள்ளதாகக் குழுவிற்கு வெளிப்படுத்தப்பட்டது .

எவ்வாறாயினும், 2013 முதல் 2018 வரையான காலப்பகுதியில் பணியகத்தினால் குறித்த கடன் திட்டம் தொடர்பில் எவ்விதப் பயனுள்ள மேற்பார்வையொன்று அல்லது தேடிப்பார்த்தலொன்று இன்மை மற்றும் திட்டம் நிறைவடைந்து சுமார் 7 ஆண்டுகள் கடந்தும் பிணையாக வழங்கப்பட்ட பணத்தைத் திரும்பப் பெறத் தவறியமையும், குறித்த பணம் சமுர்த்தி அதிகாரசபையின் பெயரில் வைப்புச் செய்யப்பட்டமையும் குழுவின் விமர்சனத்திற்கு உள்ளானது.

ரட்டவிருவோ வீடமைப்புத் திட்டக் கடன் கருத்திட்டத்தின் அனைத்துத் தகவல்களும் அதாவது, கருத்திட்டத்தின் கீழ் கடன் பெற்ற பயனாளிகளின் பெயர்ப்பட்டியல் மற்றும் ஒவ்வொரு பயனாளிக்கும் வழங்கப்பட்ட கடன் தொகை, குறித்த கருத்திட்டத்திற்கு நிதியளிக்கப்பட்ட நிதி மூலாதாரங்கள், இலங்கைச் சமுர்த்தி அதிகாரசபையுடன் பணியகத்தினால் எற்படுத்திக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கிணங்க, வீடமைப்புத் திட்டக் கடன் திட்டத்திற்காகப் பிணையாகப் பணியகத்தினால் வழங்கப்பட்ட 100 மில்லியன் ரூபா நிலையான வைப்பின் வட்டி, நிலுவை மீதி உள்ளிட்ட அனைத்துத் தகவல்களும், ரட்டவிருவோ வீடமைப்புத் திட்டக் கடன் திட்டத்தைச் செயற்படுத்துவது

தொடர்பாகப் பொறுப்பு வகித்த உத்தியோகத்தர்களின் பெயர்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்தத் தகவல்களை உள்ளடக்கிய முழுமையான அறிக்கையொன்றைத் தயாரித்துக் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு குழு விதந்துரைத்ததுடன், அதற்கமைய குறித்த அறிக்கை 2025.06.27 ஆம் திகதியிடப்பட்டு குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 04. <u>தென்கொரியா நோக்கிப் பயணித்த 6 தொழிலாளர்களுக்கு பணியகத்தினால் அதிகப் பணம் செலுத்தி விமானப் பயணச்சீட்டுகள் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்தல்</u>

2023 யூலை 25 ஆம் திகதி தென்கொரியா நோக்கிப் புறப்படவிருந்த 6 தொழிலாளர்களுக்கு விமானப் பயணச்சீட்டுகளைக் கொள்வனவு செய்யும் போது ஏற்பட்ட சிக்கல் காரணமாக அவர்களது பயணம் நிறுத்தி வைக்கப்பட்டமை குறித்துக் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது .இந்தத் தொழிலாளர்கள் 5 பயணச்சீட்டுகளைத் தலா 279,000 ரூபா வீதமும் மற்றுமொரு பயணச்சீட்டை 272,000 ரூபாவிற்கும் ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்திடமிருந்து தனிப்பட்ட முறையில் கொள்வனவு செய்திருந்த போதிலும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்திடமிருந்து அந்தப் பயணச்சீட்டுகளை 319,522 ரூபா விலைக்குக் கொள்வனவு செய்யாமை காரணமாக அன்றைய தினம் அவர்கள் கொரியா நோக்கிப் புறப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டமை குறித்துக் குழு கவனம் செலுத்தியது.

இதன் காரணமாக தொழிலாளியொருவருக்கு மீண்டும் 319,522 ரூபாயைச் செலுத்தி அன்றைய தினமே பயணிக்க முடிந்ததாகவும், ஏனைய 5 பேரும் ஒரு மாதத்தின் பின்னர் தலா 329,291 ரூபா வீதம் செலுத்தி மீண்டும் பயணச்சீட்டுகளைக் கொள்வனவு செய்ய வேண்டியிருந்ததாகவும், 6 தொழிலாளர்களுக்கும் பயணச்சீட்டுகளுக்காக ஒட்டுமொத்தமாக 1.9 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான தொகை செலவாகியுள்ளதாகவும், அவர்கள் ஆரம்பத்தில் தனிப்பட்ட முறையில் கொள்வனவு செய்த பயணச்சீட்டுக்களை இரத்துச் செய்வதன் மூலம் கிடைக்க வேண்டிய பணம் கிடைத்துள்ளதா என்பது கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதையும் குழு அவதானித்தது.

2012 ஆம் ஆண்டில் கொரியாவுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கமைய, தொழிலாளர்கள் குழுக்களாகவும் உத்தியோகபூர்வ முகவராண்மையொன்றின் ஊடாகவும் பயணிக்க வேண்டும் என்ற போதிலும், 2020 யூலை 15 ஆம் திகதி பணிப்பாளர் சபை தனிப்பட்ட முறையில் பயணச்சீட்டு கொள்வனவு செய்ய அனுமதி வழங்கியிருந்ததாகவும், 2023 ஏப்பிரல் 6 ஆம் திகதி மீண்டும் அந்தத் தீர்மானத்தை மாற்றி குழுக்களாகக் கொள்வனவு செய்யப் பணிக்கப்பட்டதாகவும், இந்த அடிக்கடி மாறும் கொள்கைகள் காரணமாகத் தொழிலாளர்கள் மத்தியில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது என்பதையும் குழு அவதானித்தது.

எவ்வாறாயினும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மை மூலம் குழுக்களாக விமானப் பயணச்சீட்டுகளைப் பெற வேண்டியது கொரியாவிற்கு நேரடி விமானப் பயணம் மூலம் முதன்முறையாக தொழிலுக்குச் செல்லும் தொழிலாளர்களுக்கு மாத்திரமே என்பதும், இரண்டாம் முறை கொரியாவிற்குச் செல்லும் அனுபவமுள்ள தொழிலாளர்கள் சிங்கப்பூர் ஊடாகத் தனிப்பட்ட முறையில் விமானப் பயணச்சீட்டுகளைக் கொள்வனவு செய்து பயணிக்க முடியும் என்பதும் குழுவிற்கு தெரியவந்தது அதற்கமையக் .கொரியாவிற்குப் பயணிப்பதற்காக விமானப் பயணச்சீட்டுகளைப் பெறுவதற்கு இரண்டு முறைகள் காணப்படுவதாகவும், அது குறித்துத் தொழிலாளர்களுக்கு முறையான தெளிவுபடுத்தல் அல்லது குறித்த செயன்முறை தொடர்பாகப் பணியகத்தினால் தெளிவான ஒழுங்குறுத்தல் முன்னெடுக்கப்படவில்லை என்றும் குழு வலியுறுத்தியது.

## 05. <u>தென்கொரியாவில் விபத்துக்குள்ளான இலங்கைத் தொழிலாளி ஒருவரை நாட்டிற்கு கொண்டு வரும் செயன்முறை</u>

2019 ஒற்றோபர் மாதம் 08 ஆம் திகதி தென்கொரியாவில் விபத்துக்குள்ளான மீன்பிடித் துறை தொழிலாளி ஒருவரை நாட்டிற்குத் கொண்டு வருவது குறித்துக் குழு கவனம் செலுத்தியது .

அவரது சகோதரரால் பணியகத்தில் 1,564,546 ரூபா பணம் வைப்புச் செய்யப்பட்டிருந்த நிலையில், தொழிலாளர் நலன்புரிப் பிரிவு

உத்தியோகத்தர் ஒருவரினால் குறித்த ஊழியரை மீண்டும் இலங்கைக்கு அனுப்புவதற்கும் மருத்துவமனை கட்டணத்தைச் செலுத்துவதற்கும் ஊழியரின் அந்த நாட்டு வங்கிக் கணக்கிலுள்ள பணம் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும், மற்றுமொரு உத்தியோகத்தர் கடன் அட்டையைப் பயன்படுத்தி விமானப் பயணச்சீட்டுகளைக் கொள்வனவு செய்துள்ளதாகவும், 2023 ஓகத்து மாதத்தில் செலவுகளைப் பரிசீலிக்காமல் மீதமான 98,786 ரூபா மாத்திரமே குறித்த ஊழியரின் சகோதரருக்குச் செலுத்தப்பட்டுள்ளது என்பதையும் குழு அவதானித்தது.

சம்பவம் நடந்த போது ஊழியரிடம் பணம் இருக்கவில்லை என்பதும், முதலாவது மருத்துவமனை கட்டணமான 170,000 கொரியன் வொன்களை தொழில் வழங்குநர் செலுத்தியுள்ளார் என்பதும், இரண்டாவது கட்டணமான 5 மில்லியன் வொன்களைப் பணியகம் பேச்சுவார்த்தை மூலம் 1.8 மில்லியனாகக் குறைத்துக் கொள்ளப்பட்டுள்ளது என்பதும் வெளிப்படுத்தப்பட்டது .மேற்குறிப்பிட்ட இரண்டு சந்தர்ப்பங்களிலும் ஊழியரின் கணக்கிலிருந்து பணம் எடுக்கப்படவில்லை என்பதைப் பணியகத்தினால் உறுதிப்படுத்த முடிந்தது .ஊழியரை மீண்டும் இலங்கைக்கு அனுப்புவதற்கான விமானப் பயணக் கட்டணம் சகோதரர் வைப்புச் செய்த பணத்திலிருந்து செலுத்தப்பட்டுள்ளது என்பதும், சுமார் 98,000 ரூபா நிலுவைத் தொகை இன்னும் செலுத்தப்பட வேண்டியுள்ள நிலையில் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதும் வெளிப்படுத்தப்பட்டது.

வெளிநாட்டு ஊழியர் ஒருவர் விபத்துக்குள்ளாகும் போது அதற்கான செலவுகளை ஈடு செய்வதற்குத் தெளிவான நடைமுறையொன்று காணப்படுகிறது .அங்கு முதலாவதாகச் சம்பந்தப்பட்ட செலவுகளை ஈடு செய்யுமாறு தொழில் வழங்குநருக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன், அதனைச் செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் மீளச் செலுத்தும் அடிப்படையில் செயற்படும் காப்புறுதி முறைகள் பயன்படுத்தப்படுகின்றன .ஒருவேளை ஊழியர் முகவராண்மையொன்றின் ஊடாகக் கொரியாவிற்குச் சென்றிருந்தால் அந்தச் செலவுகளுக்கு உதவுமாறு அந்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்படுவதுடன், ஏனைய அனைத்து மாற்று வழிகளும் தோல்வியடைந்தால் மாத்திரமே மீதமுள்ள செலவுகளை ஈடு செய்ய ஊழியரின் குடும்பத்திடம் கோரிக்கை விடுக்கப்படும் .அந்த முயற்சிகளும்

பலனளிக்கத் தவறினால் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தொழிலாளர் நலன்புரி நிதியத்தின் மூலம் குறித்த செலவு ஏற்கப்படும் . அங்கு முழுமையான ஊனமுற்ற நிலை அல்லது மரணத்தின் போது அதிகபட்சமாக 6 இலட்சம் ரூபாவிற்கு உட்பட்டு காப்புறுதி இழப்பீட்டுத் தொகையொன்றை வழங்கும் நடைமுறையும் காணப்படுகிறது.

**<u>குழுவின் விதந்துரைகள்</u>**

I. ஊழியரை மீண்டும் இலங்கைக்கு அனுப்பும் பணிகளுக்காக ஊழியரின் வங்கிக் கணக்கிலிருந்து பணம் செலவிடப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தி கொரிய வங்கியில் இருந்து கிடைக்கப்பெற்ற கடிதத்தைக் குழுவுக்கு சமர்ப்பித்தல்.

II. நிறுவனத்தின் ஒழுங்குறுத்தல் பணியின் பகுதியொன்றாகப் புலம்பெயர்ந்தோர் நலன்புரித் திட்டத்தை விரிவுபடுத்தும் போது, புலம்பெயர்ந்த ஊழியர்கள் விபத்துக்குள்ளாகும் போது சிகிச்சை அளித்தல் மற்றும் மீண்டும் இலங்கைக்கு கொண்டு வருவதற்கான செலவுகளைப் பணியகத்தின் தொழிலாளர் நலன்புரி நிதியத்தின் மூலம் ஈடு செய்வது குறித்துக் கவனம் செலுத்தி அதற்காகத் தயாரிக்கப்படும் திட்டவட்டமான வேலைத்திட்டம் குறித்துக் குழுவிற்குத் தெரியப்படுத்தல்.

**06. <u>பணியகத்திற்குச் சொந்தமான ஓமான் தூதுவாலயம் அமைந்துள்ள கட்டடத்தில் பாதுகாப்பு இல்லமொன்றை பராமரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருந்தும் அதற்காக வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டடங்களைப் பயன்படுத்துதல்.</u>**

ஓமான் தூதரகக் கட்டடத்தில் பாதுகாப்பு இல்லமொன்றை கொண்டு நடாத்த முடிந்த போதிலும், 2019 ஒற்றோபர் 01 முதல் 2024 யூலை வரை வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டடங்களுக்காக 2024 சனவரி வரை 34,000 ஓமான் ரியால்கள் அதாவது 28,561,112 ரூபா பணம் செலவிடப்பட்டுள்ளது. மேலும், 2022 ஓகத்து முதல் திசெம்பர் வரையான காலப்பகுதியில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களால் பாதுகாப்பு இல்லத்திற்கு ஏற்படுத்தப்பட்ட சேதங்கள் காரணமாக, 2023 பெப்ரவரி

முதல் ஓகத்து வரை 7 மாதத் தாமதக் கட்டணமாக 4,948,972 ரூபாவும், கட்டணப் பட்டியல்களுக்காக 1,102,902 ரூபாவும் மற்றும் திருத்தப் பணிகளுக்காக 13,078,594 ரூபாவுமாக மொத்தம் 19,130,480 ரூபா பணம் செலுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பு இல்லத்தின் தங்குமிடக் கொள்ளளவு பத்து பேருக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த அளவைத் தாண்டி சுற்றுலா விசாவில் வெளிநாடு சென்ற தொழிலாளர்களுக்கும் தங்குமிடம் வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்த நெருக்கடி காரணமாக மேலதிக வீடொன்றை வாடகைக்கு எடுப்பதற்கு நேர்ந்துள்ளதாகவும் அவதானிக்கப்பட்டது .

1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டத்தின் 53(3) பிரிவின் படி ஒவ்வொரு தொழிலாளியும் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறு பதிவு செய்யப்படாதவர்களுக்குப் பணியக நிதியைச் செலவிடுவது சட்டவிரோதமானது என்பதால் தற்போது பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு மாத்திரம் தங்குமிடம் வழங்குவதற்கான சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், சட்டவிரோதமாக வெளிநாடு செல்லும் முறைகள் குறித்துப் புரிந்து கொள்வதற்காகச் சட்டவிரோதமாக வெளிநாடு சென்ற தொழிலாளர்கள் குறித்துத் தெரிந்து கொள்வது முக்கியம் என்பதும், சட்டரீதியாக வெளிநாடு செல்லும் முறைகள் குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்துவது பணியகத்தின் முதன்மைப் பணி என்பதையும் குழு வலியுறுத்தியது.

## 07. <u>63.3 மில்லியன் ரூபா செலவில் 'விகமனிக ஹரசர' திட்டத்தை நடத்தியமை மற்றும் 1.259 பில்லியன் ரூபா செலவில் 'Glocal fair' (ஜயகமு ஸ்ரீலங்கா) திட்டத்தை நடத்தியமை</u>

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஆகியவற்றால் செயற்படுத்தப்பட்ட "விகமனிக ஹரசர" மற்றும் "ஜயகமு ஸ்ரீலங்கா" (Glocal Fair) ஆகிய இரண்டு திட்டங்கள் மீது குழுவின் தீவிர கவனம் செலுத்தப்பட்டது.

**'விகமனிக ஹரசர' வேலைத் திட்டம்**

இந்தக் வேலைத்தட்டம் பணியகத்தின் 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்தச் செயற்பாட்டுத் திட்டத்தில் உள்வாங்கப்படாத ஒன்றாகும் . மாகாண மட்டத்திலான 03 கூட்டங்களுக்காகப் புலம்பெயர்ந்தோர் சங்கங்களின் 5000 உறுப்பினர்களை உள்ளடக்கி இந்தத் வேலைத் திட்டம் நடத்தப்பட்டது .2024 யூலை 02 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க, Selacine Media Solution (Pvt.) Ltd நிறுவனத்திற்கு நேரடிக் பெறுகை நடைமுறைகளின் மூலம் வேலைத் திட்டத்தை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது .2024 யூலை 17 ஆம் திகதிய பணியகத்தின் பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு இணங்க 63,362,242 ரூபா பணம் 2024 யூலை 18 மற்றும் ஓகத்து 03 ஆகிய திகதிகளில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சிற்கு வழங்கப்பட்டது .இந்தப் பணத்திலிருந்து 03 வாழ்த்து அட்டைகளுக்காக 1,935,000 ரூபாவும், புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் போக்குவரத்துக்காக 8,230,375 ரூபாவும் மற்றும் மண்டப வசதிகள் மற்றும் உணவுப் பானங்களுக்காக 62,756,542 ரூபாவும் செலவிடப்பட்டது .இருப்பினும் இந்தச் செலவிலிருந்து தொழிலாளர்களுக்கு எவ்விதப் பயனும் கிடைக்கவில்லை என்பதும், இது ஒரு பொருளாதார ரீதியாகப் பயனற்ற செலவு என்பதும் கணக்காய்வில் கண்டறியப்பட்டுள்ளமை குறித்து குழுவிற்கு தெரிய வந்தது.

**'ஜயகமு ஸ்ரீலங்கா' (Glocal Fair) தொடர் வேலைத்திட்டம்**

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களாலும் வழங்கப்படும் சேவைகளை, வாடிக்கையாளர்கள் வசிக்கும் இடங்களிலேயே எளிதாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் நாடு முழுவதும் "Glocal Fair" (ஜயகமு ஸ்ரீலங்கா) எனும் பெயரில் நடமாடும் தொடர் சேவையொன்று நடத்தப்பட்டது. நடமாடும் தொடர் சேவைக்காக, 2020 மார்ச் 25ஆந் திகதிய 35ஆம் இலக்கத்தினால் திருத்தப்பட்ட, 2006 பெறுகை வழிகாட்டியின் 2.14.1 அத்தியாயத்திற்கு முரணாக விநியோகஸ்தர்

ஒருவரைத் தெரிவு செய்து 542,800,000 ரூபா செலுத்தப்பட்டிருந்தது. 2024 சனவரி 31 முதல் ஓகத்து 17 வரை 24 மாவட்டங்களை உள்ளடக்கி வாரத்திற்கு ஒருமுறை 24 திட்டங்களை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மிக அவசரமாகக் கருதப்பட்டு எவ்விதத் திட்டமிடலும் இன்றி அந்தத் வேலைத் திட்டம் 2024 யூலை 28 ஆம் திகதியுடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பணியகத்தின் 2024 வருடாந்தச் செயற்பாட்டுத் திட்டத்தில் இந்தத் திட்டம் உள்ளடக்கப்படவில்லை. எவ்வாறாயினும், 115 அனுமதிப் பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மைகள் இந்தத் வேலைத் திட்டத்தில் பங்கேற்றதுடன், ஒட்டுமொத்தத் வேலைத்திட்டத்திற்காக 1,259,752,579 ரூபா செலவிடப்பட்டுள்ளது. வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கில் இந்தத் தொடர் வேலைத்திட்டம் நடத்தப்பட்ட போதிலும், 2025 பெப்ரவரி 25 ஆம் திகதியாகும் போது 28 முகவராண்மைகள் மூலம் 336 தொழிலாளர்கள் மாத்திரமே வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகக் குழுவிற்கு தெரிய வந்தது.

"ஜயகமு ஶ்ரீலங்கா" (Glocal Fair) திட்டம் 2022 ஒற்றோபர் மாதம் காலி மாவட்டத்திலிருந்து ஆரம்பமானது. 2023 யூன் மாதம் அது யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டது. ஏனைய 23 மாவட்டங்களில் குறித்த திட்டம் 2024 சனவரி 31 ஆம் திகதி முதல் யூலை 28 ஆம் திகதி வரை செயற்படுத்தப்பட்டது. காலி மற்றும் யாழ் திட்டங்களுக்காக ரந்தீப மீடியா பிரைவேட் லிமிட்டெட் நிறுவனத்திடமிருந்தும், ஏனைய மாவட்டங்களுக்காக செர ஐடியா நிறுவனத்திடமிருந்தும் வணிகக் கூடங்கள் வாடகைக்குப் பெறப்பட்டிருந்தன. எனினும், இந்த இரண்டு நிறுவனங்களினதும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் ஒரே நபர்கள் என்பது அவதானிக்கப்பட்டது. காலியில் நடைபெற்ற திட்டத்தில் வணிகக் கூடமொன்றிற்கு 170,000 ரூபா செலவிடப்பட்டிருந்த போதிலும், ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் அதே அளவிலான கூடமொன்றிற்கு தலா 500,000 ரூபா செலவிடப்பட்டுள்ளது என்பதை குழு அவதானித்தது.

ஒட்டுமொத்தத் வேலைத்திட்டத்திற்குச் செலவான 1,259 மில்லியன் ரூபாவில் 560 மில்லியன் ரூபா வணிகக் கூடங்களுக்காகவும், மீதி 699 மில்லியன் ரூபா நலன்புரிப் பணிகள் (புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பிள்ளைகளுக்குப் பாடசாலை உபகரணங்கள், புலமைப்பரிசில்கள் வழங்குதல் போன்றவை) மற்றும் ஏனைய செலவுகளுக்காகவும்

பயன்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் திட்டத்திற்கான அமைச்சரவை அங்கீகாரம், திட்டம் நடந்து கொண்டிருக்கும் போதே, அதாவது 2024 மார்ச் 12 ஆம் திகதியே கிடைத்துள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. முறையான பெறுகை நடைமுறையைப் பின்பற்றாமை மற்றும் திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேறாமை காரணமாகச் செலவுகளை நியாயப்படுத்த முடியாது என்பதைக் குழு அவதானித்தது.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் நலன்புரிப் பணிகளுக்காகப் பயன்படுத்தக் கூடியதாகவிருந்த இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் நிதி, அரசியல் திட்டமொன்றிற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள விதம், குறித்த திட்டத்தின் ஊடாகக் குழுவிற்குத் தெளிவாகப் புலப்பட்டது.

## 07. <u>சில வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மைகள் புலம்பெயர்ந்த தொழிலாளர்களைப் பணியகத்தில் பதிவு செய்யும் போது மேற்கொள்ளும் மோசடிகள்</u>

குழுவினால் எஸ்.எஸ்.பி.எல் .வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மையின் உரிமையாளர் திரு.விஜய உந்துபிட்டிய நாடாளுமன்ற நிலையியற் கட்டளை 120(6) இன் கீழ் அழைக்கப்பட்டிருந்தார் .அவரிடமிருப்பதாகக் கூறப்படும் மோசடி குறித்த தகவல்களைக் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு குழுவின் தவிசாளர் அறிவித்தார்.

ஒவ்வொரு புலம்பெயர்ந்த தொழிலாளியும் பணியகத்தில் பதிவு செய்யும் போது கட்டணமொன்றைச் செலுத்துவதாகவும், குறித்த வேலைவாய்ப்பு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மையொன்றின் ஊடாகப் பெற்றுக்கொடுக்கப்பட்டால் அந்தப் பதிவுக் கட்டணத்தில் 70% பணத்தொகையை மீண்டும் அந்த முகவராண்மைக்கு செலுத்தப்படுவதாகவும் தெரிய வந்தது. தனிப்பட்ட வழிகளில் வேலை தேடி வெளிநாடு சென்ற தொழிலாளர்களின் தகவல்களை, போலியான ஆவணங்கள் மூலம் முகவராண்மைகள் ஊடாகச் சென்றவர்கள் எனப் பதிவு செய்து, அவர்கள் பணியகத்திற்குச் செலுத்திய பதிவுக் கட்டணத்தில்

70% பணத்தை முகவராண்மைகள் பெற்றுக்கொண்டதாக விஜய உந்துபிட்டிய அவர்கள் குற்றஞ்சாட்டினார். இந்த ஊழல் காரணமாக 2013 முதல் 2024 வரையான காலப்பகுதியில் அரசாங்கம் 1.8 பில்லியன் ரூபா வருமானத்தை இழந்துள்ளதென அவர் குறிப்பிட்டார்.

2015-2017 காலப்பகுதியில் இந்த மோசடியான செயலைச் சட்டப்பூர்வமாக்கி 3 முகவாரண்மைகளுக்கு இரகசியச் சுற்றறிக்கை ஒன்றை வெளியிடுவதன் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், நிரல் அமைச்சு அந்த மோசடியான நிறுவனங்களை பாராட்டியுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார் .அவர் 2019 இல் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் இது தொடர்பாகப் முறைப்பாடு செய்துள்ளார் .இந்த முறைப்பாடு ஆணைக்குழுவின் சட்டப் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பின்னாய்வின் போது அவருக்குத் தெரியவந்துள்ளது.

இந்த ஊழல் குறித்துத் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளருக்கும் முறைப்பாடு செய்துள்ளதாகவும், அதற்கமைய அமைச்சின் உள்ளக கணக்காய்வாளரினால் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் திரு. விஜய உந்துபிட்டிய அவர்கள் குறிப்பிட்டார். அந்த விசாரணையின் விதந்துரைக்கமைய குறித்த மூன்று முகவராண்மைகளிடமிருந்தும் 123 மில்லியன் ரூபா பணம் அறவிடப்பட வேண்டும் என்ற போதிலும், அமைச்சு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், இந்த மோசடிக்கு பணியகத்தின் உள்ளக ஒத்துழைப்பு இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.